சூரிய காந்தி
SOORIYA GANDHI

விலை ரூபா 5-00

வினோவின் தரம்
என்றும் நிரந்தரம்

புதிய சிங்கப்பூர் டிசைன் நகைகள்
22 கரட் நகைகள் பெற
நம்பிக்கையான இடம்

வினோ நகைப் பூங்கா

185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மலர் 1 வெள்ளிக்கிழமை 20 - 2 - 1998 இதழ் 19

# புலிகளின் தற்கொலைப் பிரிவில் சிங்களவர்களும் 'லக்பிம' செய்தி!

## தீவிர விசாரணைகளில் இருந்து கிடைக்கப் பெற்ற தகவல்கள்

ஜனாதிபதி, எதிர்க்கட்சித் தலைவர், படைத்தளபதிகள் அதே போன்ற மேல்மட்ட உயர் அதிகாரிகளைப் படுகொலை செய்யும் பொறுப்பை விசேட தற்கொலைப் பயிற்சி பெற்ற சிங்கள இனத்தைச் சேர்ந்த மூவரிடம் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் ஒப்படைத்திருப்பதாக லக்பிம என்ற 'சிங்கள வாரப்பத்திரிகை தலைப்புச் செய்தி வெளியிட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது.

கடந்த சில தினங்களுக்கு முன்பு தலதா மாளிகைக்கு அருகில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக ஆராய்ந்து செல்கையிலேயே இந்தத் தகவல்கள் கிடைத்துள்ளதாகவும் விடுதலைப் புலிகள் இயக்கம் தனது நடவடிக்கைகளுக்காக சிங்கள இனத்தவரை ஈடுபடுத்துவதாக இதற்கு முன்பும் தகவல் பரவியிருந்தது. அவர்களின் இராணுவப் பிரிவினுள் சிங்கள இனத்தவர்கள் உள்ளதாகவும், கடந்த காலத்தில் அடிக்கடி தகவல்கள் வெளிவந்தன.

ஆனால், அவர்களின் தற்கொலைக் கெரில்லாக்கள் மத்தியில் சிங்கள இனத்தைச் சேர்ந்த தற்கொலை படையினர் உள்ளதாக வெளிவந்துள்ளது இதுவே முதற்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## 2000 ஆண்டில் தேர்தல் நீதியமைச்சர் ஜி.எல்.பீரிஸ்

உத்தேச அரசியல் யாப்பில் சேர்க்கப்பட்டுள்ள இடைக்கால ஏற்பாடுகளை பதினைந்து நாட்களுக்குள் வெளியிட அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

உத்தேச அரசியல் யாப்பு அமுல் படுத்தப் பட்ட பின்பு நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறை ஒழிக்கப் படுமென அரசியல் நீதி விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

உத்தேச அரசியல் யாப்பு அமுல் படுத்தப் பட்டாலும் அது பாராளுமன்ற ஆட்சிக் காலத்தில் எதுவித தாக்கத்தையும் ஏற்படுத்தாதெனவும் இரண்டாயிரம் ஆண்டில் தான் பொதுத்தேர்தல் நடக்குமெனவும் பேராசிரியர் பீரிஸ் மேலும் தெரிவித்துள்ளார்.

அரசியல் யாப்புச் சீர்திருத்தங்கள் பற்றி மேலும் ஆராய்வதற்காக தமிழ், முஸ்லிம் அரசியல் கட்சிகள் இன்று தம்மைச் சந்திக்க இருப்பதாகவும் பேராசிரியர் பீரிஸ்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## "தினகரன்" மீது ஆத்திரம்! பாராளு மன்றத்தில் அஷ்ரப்

கப்பல் போக்குவரத்து துறைமுக அமைச்சர் எம். எச். எம் அஷ்ரப் தினகரன் பத்திரிகையை எரித்து விடுவேன் என பாராளுமன்றத்தில் சத்தமாகச் சொன்னார்.

''தினகரன் பத்திரிகை எனது செய்திகளை வெளியிடுவதில்லை முஸ்லிம் 'காங்கிரஸிற்கு எதிராக செயற்பட்டு வருகிறது. அதன் நிருபர்களை பாராளுமன்றத்திற்குள் அனுமதிக்கக் கூடாது'' என்றும் அவர் தெரிவித்தார்.

## நான்கு புலிகள் பலி

கிளிநொச்சிப் பகுதியில் நேற்று முன்தினம் இராணுவத்துடன் ஏற்பட்ட மோதல் சம்பவத்தில் நான்கு விடுதலைப் புலிகள் பலியானதாக புலிகளின் குரல் அறிவித்துள்ளது.

கனகரூபி/இராவலன் (யாழ்ப்பாணம், ஜெயரெட்ணம் இராஜஜீவன்) கதிரேந்தி/சோபியன் (வவுனியா, இராமு மகாலிங்கம்) வவுதேவன்/கணேஸ் (யாழ்ப்பாணம், திருஞானசம்பந்த மூர்த்தி சிவகுமார்) குலமகள் (மட்டக்களப்பு, முருகேசு சாந்தினி)

## ஜனாதிபதியின் கூற்றுக்கு அமைச்சரின் விளக்கம்

வட பகுதி நிர்வாகத்தைப் பிரபாகரனிடம் ஒப்படைக்க தாம் தயாராக உள்ளதாக ஜனாதிபதி 'ரைம்' சஞ்சிகைக்கு கூறி இருந்தார் என தொடர்பு சாதனங்கள் வெளியிட்ட அறிக்கை பற்றி பத்திரிகையாளர் மகாநாட்டில் விளக்கம் அளித்த அமைச்சர் மங்கள சமரவீர ஜனாதிபதியின் கூற்றானது - வடக்குக் கிழக்கு யுத்தம் விரைவில் முடிவுக்குக் கொண்டு வரப்படும் என்று ஜனாதிபதி தேர்தல் பிரச்சாரத்தின் போது உறுதி அளித்திருந்தார். இதற்கு மக்களும் தமது ஆணையை வழங்கினார்கள்; அவர் பதவி ஏற்றதும் இந்த ஆணையை மனதில் கொண்டு இனப்பிரச்சனைக்குச் சமாதானத் 'தீர்வு காணும் முகமாகப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை உடனடியாக ஆரம்பித்தார்,

இப் பேச்சுவார்த்தைகளின் போது ஜனாதிபதி இரண்டு அம்சங்களில் கவனம் செலுத்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# பழம் பெரும் மொழி, பண்பாடு, வரலாறு கொண்டது தமிழீழம்

## பிரபாகரன்

சிங்கள இனவாத அரசு எமக்கு எதிராக ஒரு ஆயுதப் போரை மட்டும் நடத்தவில்லை ஒரு கருத்துப்போரையும் நடத்தி வருகிறது. உண்மைகளை மறைத்து பொய்களைபுனைந்து மக்களைக் குழப்பும் நேக்கத்தில் இந்த பரப்புரைப் போர் நடத்தப் பட்டு வருகிறது. சிங்கள தேசத்தின் சகல மக்கள் தொடர்பு சாதனங்களும் இந்த பரப்புரைப் போரை முன்னெடுப் பதில் மும்முரமாகச் செயற்பட்டு வருகின்றன.

இவ்வாறு நேற்றைய தினம் புலிகளின்குரல் வானொலிக் கலைஞர்களுக்குப் பரிசு வழங்கும் வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே.பிரபாகரன் தெரிவித்தார். தமிழீழ மக்களின் விடுதலைப் போருக்குக் களங்கம் ஏற்படுத்தி போராட்டத்தை மழுங்கடிக்கச் செய்வது இந்த கருத்துப் போரின் கபட நோக்கம். நாம் எமது மக்களுக்கும் உலகத்திற்கும் உண்மையை எடுத்துச் சொல்லவேண்டும்.

உண்மை என்ற ஆயுதம் ஏந்தி நாம் பொய்மைக்கு எதிராகப்போராடவேண்டும். பொய்களும் புனை கதைகளும் காலத்தால் அழிந்துபோவன. உண்மைதான் என்றும் நிலைக்கும்.

எனவே எமது மண்ணில் நிலவும் உண்மை நிலையை யதார்த்த சூழ்நிலையை நாம் துணிவுடனும் நேர்மையுடனும் எடுத்துச் சொல்லத் தயங்கக்கூடாது.

சிங்கள பேரினவாதத்தின் பரப்புரைத் தந்திரோபாயங்களில் முக்கியமானது தமிழர்கள் சிறுபான்மை இனத்தவரென்றும் பல்வேறு இனக் குழுக்களில் ஒருகுழு என்றும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஊழலின் 'அச்சத்தாலேயே காங்கிரஸ் வெளியேறியது - குஜ்ரால்

போர்பஸ் பற்றிய ஊழலை ஐக்கிய முன்னணி அரசாங்கம் பலப்படுத்திவிடும் என்ற அச்சமே எமக்கு வழங்கிவந்த ஆதரவை காங்கிரஸ் கட்சி விலக்கிக்கொள்ளக் காரணம்.

இவ்வாறு தென்னிந்திய மாநிலமான கர்நாடகாவில் நடந்த பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய பிரதமர் ஐ. கே. குஜ்ரால் தெரிவித்

(6 ஆம் பக்கம் பார்க்க)

யாழ். புனரமைப்புக்கு

# ஜேர்மன் அரசு 16 கோடி 50 லட்சம் ரூபா உதவி

யாழ். மாவட்ட புனரமைப்பு வேலைகளிற்கு என்று ஜேர்மனி அரசாங்கம் 16 கோடியே 50 லட்சம் பெறுமதியான பொருட்களை அன்பளிப்பாக வழங்கமுன்வந்துள்ளது.

கட்டிட நிர்மாணத்துக்கு தேவையான பொருட்களும் அவற்றை எடுத்துச்செல்வதற்கான போக்குவரத்து செலவுளும் இந்த உதவி மூலம் கிடைக்கப் பெறுகின்றன.

ஜேர்மனியின் புனரமைப்பு வங்கி செலவுப் பணத்தில் முக்கியமாக நீர் விநியோகம் மற்றும் பாடசாலை கட்டிட புனரமைப்பு என்பவற்றிற்கு இந்தஉதவிபயன்படுத்தப்படும் இதில் வீடமைப்பு திட்டத்திற்கும் விசேடகவனம்செலுத்தப்படும்.

இந்த திட்டத்தை வட பகுதிக்கான மீள்குடியமர்வு, புனர்வாழ்வு அதிகாரசபை தொழில் நுட்ப ஒத்துழைப்பிற்கான ஜேர்மன் கழகத்தின் உதவிரிடன் நடைமுறைப்படுத்தும் ஜேர்மனிய வுபுணர்கள் யாழ்ப்பாண மக்களின் வாழ்க்கை நிலைமையை முன்னேற்றுகின்ற நடவடிக்கைகளில் ஏற்கனவே ஈடுபட்டு வருகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்க ஒரு அம்சமாகும்.

# முருகனிடம் வந்த அடியாரை நட்டாற்றில் கைவிட்ட பஸ்

(தொண்டைமானாறு)

தைப்பூசத் திருவிழாவை முன்னிட்டு பிரபல்ய செல்வச்சந்நிதி ஆலயத்திற்கு செல்லும் பக்தர்களது வசதிகருதி அன்றைய தினம் பருத்தித்துறைக்கான் பஸ்சேவைகளை காலைமுதல் ஆலய வீதியினூடாக மேற்கொண்டு வந்தது. ஆனால் பிற்பகல் பொழுது முதல் பஸ் சேவைகளை ஆலயப் பகுதியான தொண்டமானாறு ஊடாக செல்வதை தவிர்த்து பருத்தித்துறையிலிருந்து நேரடியாக யாழ்ப்பாணத்தை சென்றடைந்து விட்டது.

ஆனாலும் பஸ்ஸிற்காக வெகு நேரமாக காத்திருந்த பக்தர்கள் பஸ் கிடைக்காமையால் உற்றார், உறவினர்வீடுகளில் ஒரு பகுதியினர் தங்க ஏனையோர் கால் நடையாகவும், பொருட்களேற்றும் லொறிகள் மூலமாகவும் யாழ் நகரப் பகுதிகளிற்கு பெரும் சிரமங்களிற்கிடையில் வந்து சேர்ந்தனர்.

சென்ற ஆண்டு திருவிழாக் காலப் பகுதியிலும் இவ்வாறக வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறைக் கிளையினர் நடந்துகொண்டதாக பக்தர்கள்கவலை தெரிவித்துள்ளனர்.

## பாடநூல்களின்றி அவதி

தீவகப் பாடசாலை மாணவர்கள் போதிய இலவச பாட நூல்களின்றித் தமது கல்வியை முன்னெடுத்துச் செல்ல அவதிப்படுகின்றார்கள். குறிப்பாக ஆண்டு 1 தொடக்கம் ஆண்டு 5 வரை கல்வி கற்கும் ஆரம்பக் கல்விப் பாடங்களுக்குரிய இலவச நூல்கள் போதியளவு இன்மையால் பெரும் சிரமப்பட்டே கல்வியைத் தொடர்கின்றனர்.

(சி - 1)

## திருடர்கள் கைவரிசை

மானிப்பாய், ஆனைக்கோட்டை, சுதுமலை பகுதியில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. ஆட்கள் இல்லாத வீடுகளில் இரவு வேளைகளில் மட்டுமல்லாது பகல் வேளையிலும் கதவுகள், யன்னல்கள், இரும்பு கேற்றுக்கள் முதலியன திருடப்பட்டு வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த வாரம் பல திருடர்கள் இராணுவத்தினரிடம்பிடிபட்டிருந்தனர். எனினும் திருட்டுச் செயல்கள் குறையவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

## விடுதலை முன்னணி தடை நீடிப்பு

ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணி மீதான தடையை இந்திய மத்திய அரசு மேலும் இரண்டாண்டுகள் நீடித்துள்ளது.

நாட்டின் பந்தோபஸ்த்துக்கும் ஒருமைப் பாட்டிற்கும் எதிரான நடவடிக்கைகளில் இவ்வமைப்பு ஈடுபட்டதால் 1992ம் ஆண்டு சட்டவிரோத அமைப்பாகஅறிவிக்கப்பட்டதும். பின்பு 1994 இலும் 1996 இலும் இவ்வமைப்பு தடைசெய்யப் பட்டதும் குறிப்பிடத்தக்கது.


புலமைப் பரிசில் மொழி விருத்தி

தமிழ்

ஆண்டு 5

(இலங்கை அரசினால் நடத்தப்படும் ஆண்டு 5 புலமைப் பரீட்சையில் வினாவப்படும் மொழி விருத்தி சம்பந்தமான அனைத்துவகை வினாக்களும் அடங்கியது)

ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை,
யாழ்ப்பாணம்.


## கொழும்பை பிராந்திய நிதி நிலையமாக்க முயற்சி

கொழும்பை பிராந்திய நிதி நிலையமாக்குவதற்கான முக்கிய அம்சங்களை இலங்கை பொருளாதார நாணய நிபுணர்கள் வகுக்க உள்ளனர்.

இலங்கை பிராந்திய நிலையமாக விருத்தியடைவதற்கு உரிய சாத்தியமான வளங்களை கொண்டிருக்கின்றது. பட்டய முகாமை கணக்காளர் நிலையத்தின் வருடாந்த மகாநாடு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மண்டபத்தில் நடை பெறும் போது இதற்கான வழிவகைகள் விரிவாக ஆராயப்படும் என்று தெரிய வருகிறது.

கொழும்பை பிராந்தியநிதி நிலையமாக்குவதற்கு தற்போது உள்ள வளம் தேவையான திறன் மற்றும் அம்சங்கள் குறித்த சிறப்பு ஆய்வுரைகள் இந்தமாநாட்டில் சமர்ப்பிக்கப்படும்.

பட்டைய கணக்காளர் நிலையத் தலைவர் எஸ். நல்லைநாதன் அண்மையில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் இவ்விபரங்களைத் தெரிவித்துள்ளார்.

## பாம்பினால் கடியுண்டார்

நேற்றையதினம் கொழும்புத்துறைப் பகுதியில் ஒருவர் பாம்பினால் கடியுண்டார்.

கறி சமைப்பதற்காக வாங்கி வைத்திருந்த மரக்கறிகளுக்கிடையே இருந்த பாம்பே இவரைத் தீண்டியதாக தெரிவிக்கப்பட்டது.

திருமதி சத்தியவாணி ஜோன்சன் (33 வயது) என்பவரே பாம்பினால் கடியுண்டவராவார். இவர் யாழ். பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

## தியாகராசா திறந்துவைத்தார்

வேலணைத்துறையூரில் வறுமைக் கோட்டின் கீழ் வாழுகின்ற மகளிர் துயர் துடைக்க ''தையல் பயிற்சி'' நிலையமொன்றினை வேலணை உதவி அரசாங்க அதிபர். த. தியாகராசா அவர்கள் 18 - 02 - 1998ல் திறந்து வைத்தார். இந்நிகழ்வில் கிராம சேவையாளர்கள் மற்றும் அரச சேவையாளர்கள் கலந்து கொண்டதுடன் மேற்படி பயிற்சி நிலையங்கள் தீவகம் பூராவும் விஸ்தரிக்கப்படுமென உதவி அரசஅதிபர் குறிப்பிட்டார்.

(சி - 1)

## வைத்தியசாலை குறைபாடுகள் பற்றி ஆராய்வு

யாழ்ப்பாண பொது மருத்துவமனையின் அபிவிருத்திப் பணிகளை வைத்தியசாலை அபிவிருத்திச் சபை மேப்படுத்தவுள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை யாழ்ப்பாணத்தில் செயற்பட்டு வரும் நீதிக்கும் சமாதானத்திற்குமான அமைப்பு மேற்கொண்டு வருகின்றது.

அண்மையில் யாழ் மறைமாவட்டப்பேராயர் தோமஸ் சௌந்தரநாயகம் அடிகளார் தலைமையில் நடை பெற்ற கூட்டத்தில் யாழ் அரசினர் போதனா வைத்தியசாலையில் நிலவும் குறைபாடுகள் பற்றி இந்த அமைப்பு ஆராய்ந்தது.

## உதைபந்தாட்டப் போட்டி இன்று

யாழ் பிரதேச செயலகப் பிரிவு உதை பந்தாட்டப் போட்டியில் இன்று பிற்பகல் 3.00 மணிக்கு பாரதி விளையாட்டுக் கழகம் பாசையூர் சென் அந் தனீஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்தும் அதன் பின்னர் பிற்பகல்4.00 மணிக்கு குருநகர் பாடும் மீன் விளையாட்டுக் கழகம் சென் றோக்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்தும் விளையாடுகின்றன.

# மந்திரிசபைக் கூட்டத்தில் 'பென்னாம் பெரிய' பப்பா!

மந்திரி சபைக் கூட்டம் நடந்து கொண்டிந்தபோது அமைச்சர். டி. எம். ஜயரத்னா ஒரு ''பென்னாம் பெரிய'' பப்பாப் பழத்தைக் கொண்டு வந்து ஜனாதிபதியின் மேசையின் மேல் வைத்தார்.

மற்றைய அமைச்சர்களுக்கு இது புதிராக இருந்தது தன்னுடைய அமைச்சின் கீழ்வரும் விவசாய ஆராய்ச்சி நிலையம் செய்த ஆராய்ச்சியால் விளைந்தது அந்தப் பப்பாப்பழம் என்றார் அமைச்சர் ஜயரத்தினா.

பிரதமர் ஸ்ரீமாவோ சொன்னார்; பெரிய பப்பாப் பழங்கள் இனிப்பாக இருப்பதில்லை!''

அக்கூற்றை மறுத்துரைத்த அமைச்சர் ஜயரத்தினா ''இல்லை அம்மா; இது நிறையச் சுவையானது!'' என்றார்.

என்னுடைய அமைச்சு நடத்தும் ஆராய்ச்சி வேலைகளுக்கு நிறையப் பணம் தேவையாக இருக்கிறது அமைச்சரவை அதனை ஒதுக்கித் தரவேண்டும் அப்போதுதான் நல்ல முறையில் விவசாய ஆராய்ச்சியை மேற்கொள்ள முடியும்! அதற்காகத்தான்இதனை இங்கே கொண்டு வந்தேன்!'' தொடர்ந்தார் அமைச்சர் ஜயரத்னா.

இதற்கு முன்னர் ஒரு தடவை தனது அமைச்சுக்கு மேலும்அதிகநிதிவேண்டுமென்று அமைச்சர் ஜயரத்னா ஒரு ''காபினெட்'' அறிக்கை சமர்ப்பித்திருந்தார்.

ஆனால் அந்த அறிக்கையை ''காபினெட்'' அவ்வளவாக கருத்தில் எடுத்துக் கொள்ளவில்லை''

இந்தத் தடவை அப்படிச் செய்யாமல் அமைச்சர் ஜயரத்தினாவின் கோரிக்கையை அமைச்சரவை பொறுமையுடன் பரிசீலணை செய்தது.

இருப்பினும் இதுதொடர்பானமுடிவினை பிறிதொரு தினத்தில் எடுப்பதாகக் கூறி விஷயத்தை ஒத்திவைத்தது.

# சிவபாலனுக்கு பிரியாவிடை

யாழ் கச்சேரியில் நீண்ட காலம் பிரதம கணக்காளராக பணி புரிந்து இம் மாதம் தொடக்கம் வடக்கு கிழக்கு மாகாண கல்வி கலாசார விளையாட்டுத் துறை அமைச்சின் பிரதம கணக்காளராக பதவியேற்றுச்செல்லும் சுவாமிநாதன் சிவபாலனுக்கு யாழ் செயலக நிதிப்பிரிவு ஓய்வூதியப் பிரிவு ஓய்வூதியக் கணிப்புப் பிரிவு ஆகியவற்றினால் சேவை நலன் பாராட்டும் பிரியாவிடை வைபவமும் நடாத்தப்பட்டது.

இவ் வைபவத்திற்கு யாழ். மேலதிக அரசாங்க அதிபர் திரு. து. வைத்திலிங்கம் அவர்கள் தலமை வகித்து உரையாற்றுகையில் திரு. சிவபாலன் நெருக்கடியான காலகட்டத்திலும் மனந்தளராது மன உறுதியுடன் பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியில் தனது சேவையை இங்கு திறம்பட ஆற்றியுள்ளார். மேலும் அவர் பல்வேறு துறைகளிலும் அதிக நாட்டத்துடன் ஈடுபட்டு வந்துள்ளார். அவருக்குப் பொருத்தமானது ஆன்மீகத்துறையே என்று கூறினார்.

திரு. சிவபாலன் தனது உரையில் கூறியதாவது எனது சேவைக்காலத்தில் பல அனுபவங்களைப் பெற்றிருக்கின்றேன்.

எனக்கு யாழ் மாவட்டத்திலிருந்தே மக்களுக்கு சேவையாற்ற வேண்டுமென்று விருப்பம். அதற்கமையத் தானோ வடக்கு கிழக்கு மாகாணத்தில் தற்போதைய பதவி கிடைத்துள்ளது இதற்கமைய திருகோணமலை மாவட்டத்தில் எனது பணியை மேற்கொள்ளவுள்ளேன். மேலும் கணக்குக் கிளையில் தீர்க்க முடியாத பல வேலைகளை எனது காலத்தில் முற்றுப் பெறச் செய்துள்ளேன். நான் எனது சேவையை முடித்தவுடன் ஆன்மீக சேவையிலேயே ஈடுபடவுள்ளேன் என்றார்.

இவ் வைபவத்தில் நிர்வாக உத்தியோகத்தர் க. இராசதுரை யாழ் செயலக கணக்காளர் எஸ், நாகராசா, கணக்காளர் தணிகாசலம், ஓய்வூதியக் கணிப்புக் கிளை பிரதம லிகிதர் சின்னத்துரை கணக்குக்கிளை பிரதம லிகிதர் திரு. வே. குமாரசாமி, நிர்வாக உத்தியோகத்தர் வீரபத்திரபிள்ளை ஆகியோரும் கலந்து கொண்டு உரையாற்றினார்கள்

நன்றியுரையை செல்வி. தம்பி. ராசா கூறினார்.

## கீரிமலையில் சிவராத்திரி விழா

இவ்வாண்டு சிவராத்திரி தினத்தன்று கீரிமலை நகுலேஸ்வரத்திற்குச் சென்று சிவராத்திரி விரதத்தை அனுட்டிப்பதற்கும் கீரிமலை புனித தீர்த்தத்தில் தீர்த்தமாடுவதற்கும் ஒழுங்குகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

இப் புனித நிகழ்ச்சியில் கலந்து கொள்ள விரும்பும் அடியார்கள் 25/ 2/ 98 புதன் கிழமை பி. ப. 2.00 மணி தொடக்கம் 6மணிவரை தெல்லிப்பளைச் சந்தியில் இருந்து புறப்படும் பேரூந்துகள் மூலம் கீரிமலைக்குச் செல்லலாம். இரவு நகுலேஸ்வரஆலயத்தில் நடைபெறும் நான்கு சாமப் பூசைகளிலும் பங்கு கொண்ட பின் 26/ 02/ 98 வியாழன் காலை தீர்த்தமாடுவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

26. 02. 98 காலை கீரிமலையில் புனித தீர்த்தமாடவும் பிதிர்க் கடன் செய்யவும் வருபவர்களுக்கு வசதியாக அன்று காலையிலும் தெல்லிப்பளையிலிருந்து பேரூந்து சேவைகள் காலை 11. 00 மணிவரை நடை பெறவுள்ளது.

நகுலேஸ்வர சுவாமி கோயில் ஆதீன பிரதம சிவாச்சாரியாருடன் இந்து சமயப் பேரவையும் எடுத்த முயற்சியினால் சிவராத்திரி விழா கீரிமலையில் நடைபெற கைகூடியுள்ளது.

## பிரிவுபசார வைபவம்

யாழ் மாநகர சபையில் கடந்த15 ஆண்டுகளாக மின் பொறியியலாளராகக் கடமையாற்றியதுடன் கடந்த 05 ஆண்டு களாகப் பதில்ஆணையாளராகவும் கடந்த 03ஆண்டுகளாகப் நீர்வேலைப் பொறியியலாளராக கடமையாற்றி 10.02.98ம் திகதி ஓய்வு பெற்ற வே.நலரத்தினராஜா 14.02.98ம் திகதி சனிக்கிழமைமின் பொறியிலாளர் அலுவலக உத்தியோகத்தர்களால் மதிய போசனத்துடன் பிரிவுபசார வைபவமும் நடாத்தப்பட்டுக் கௌரவிக்கப்பட்டார்.

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# சூரியகாந்தி

## பெரிய எலும்புத் துண்டுகளும் சின்னத்தனமான மனிதர்களும்

சமூக நீதி வேண்டும்.

பொருளாதார முன்னேற்றம் வேண்டும். தார் மீக வாழ்வு நிலைபெற்று வளர வேண்டும். - இதற்கெல்லாம் அடிப்படையாக அமைவது- முதல் தேவையாக அமைவது தூய ஆட்சி!

ஆட்சியில் திறமையும் இருக்க வேண்டும்; தூய்மையும் இருக்க வேண்டும்.

இவை இரண்டும் இல்லாமல் போனால் என்ன நடக்கும்? அதிகாரம் துஷ்பிரயோகம் செய்யப்படும், செல்வமும் துஷ் பிரயோகம் செய்யப்படும்.

செல்வத்தின் துஷ்பிரயோகம் அதிகாரத்தின் துஷ்பிர யோகமாக முடிகிறது.

ஏழை எளிய மக்கள் ஏமாற்றத்துக்கு உள்ளாகிறார் கள்.

இன்றுள்ள யாழ்ப்பாணத்திலே பல இடங்களில், முக் கியமான துறைகளில் - நிர்வாகம் ஊழல் மலிந்ததாகவும் திறமை அற்றதாகவும் சலுகை ஆட்சி நடத்துவதாகவும் உள்ளது.

''லஞ்சம்'' என்ற பசாசு எப்படியோ எல்லா இடங் களிலும் கை தட்டிக் கூத்தாடிக் கொண்டு நிற்கிறது.

''வேண்டியவர்களுக்கு சலுகை'' என்பது பாரம்பரியமாக தொடர்கிறது!

நியாயமற்ற காரியங்களுக்காக அதிகாரத்தை துஷ்பிர யோகம் செய்தல் சர்வ சாதரணமாக நடக்கிறது.

சாதாரணமாக குறைந்த சம்பளம் வாங்குகின்றவர் கள் தான் பணத்தேவை காரணமாக லஞ்சத்திலும் ஊழ லிலும் ஈடுபடுவார்கள் என்று பலரும் நினைக்கலாம்.

**ஆனால் உண்மை அதுவல்ல!**

நிர்வாகத் திறமைக் குறைவில் மிக அபாயகரமான அம்சம் அரசுப்பணிகளைச் செய்வதில் ஏற்படும் காலதா மதம். இதன் விளைவாக ''துரிதப்பணம்'' என்பதாக ஒரு கொடிய பழக்கம் தோன்றியுள்ளது.

இந்த லஞ்சம் அதிகாரிகள் தவறான காரியம் எதை யும் செய்வதற்காக் தரப்படுவது அல்ல!

கால தாமதமின்றிக் காரியங்கள் நடப்பதற்காகக் கொடுக்கவேண்டிய பணம்!

இந்தத் ''துரிதப்பணம்'' தான் இப்போது யாழ்ப்பா ணத்தில் ஆட்சி செய்து கொண்டு இருக்கிறது.

கோடிக்கணக்கில் தேடியவர்கள் தான், அடுத்த கோடி யைத் தேடுவதற்காக ''பெரிய எலும்புத் துண்டுகளை'' தாராளமாக எடுத்து வீசுகிறார்கள்.

உயர்ந்த பதவிகளிலே இருக்கும் ''சின்னத்தனமான'' மனிதர்கள் இந்த ''எலும்புத் துண்டுகளு'' க்காக நாயாக அலைகிறார்கள்.

## திருநாவுக்கரசர்

டாக்டர் மு. வரதராசனார்

திருநாவுக்கரசர் வட மொழியும் தமிழும் நன்கு கற்றுத் தேர்ந்தவர் சைவ சமய நூல்களில் புலமை மிகுந்தவராய், சைனத் துறவி களிடையே தலைமையும் பெற்று விளங்கியவர்.

பிறந்த குடும்பம் சைவ சமயத்தில் ஈடுபாடு கொண் டது.

தமக்கை கோயில் தொண் டில் ஆர்வம் நிரம்பியவர்.

அவருடைய அன்பினால் இழுக்கப்பட்டு மறுபடியும் சைவ சமயத்திற்கே வந்து நெடுங்காலம் வாழ்ந்து தலங் கள் பலவற்றிற்கும் சென்று பக்திப் பாடல்கள் பாடினார்.

அவர் பாடியவற்றுள் ஒரு பகுதி தாளத்துடன் கூடிய இசையோடு அமைந்த பாடல் கள் மற்றொரு பகுதி தாளம் இல்லாமல் இசை அமைத்துப் பாடுபவை, அவை திருத் தாண்டகம் என்னும் செய்யுள் வகையால் அமைந்தவை. அந்தத் தாண்டகப் பாடல் களை ஆழ்வார்களுள் ஒரு வரும் பாடியுள்ளார்.

திருநாவுக்கரசர் அந்தப் பாடல்களைப் பாடுவதில் சிறந்து விளங்கிய காரணத் தால், 'தாண்டக வேந்தர்' என்று போற்றப்பட்டார்.

அந்தப் பாடல்களின் இசை மிக நெகிழ்வித்து நெஞ்சை உருக்குவதாகும்.

அவர்க்கு ஒரு சமயம், பகை கொண்ட அரசன் வருமாறு ஆணை அனுப்பினான்.

அப்போது அவர் பாடிய பாடல் அவருடைய பெருமித உணர்ச்சியையும் சிவபக்தியை யும் ஒழுங்கே புலப்படுத்து கிறது.

'யாம் யார்க்கும் குடியாக அடங்கி வாழவில்லை. எமனுக்கும் அஞ்சுவதில்லை. நரகத்தில் சென்று இடர்ப் படுவதில்லை. பொய்ம்மை எம் வாழ்வில் இல்லை, மகிழ்ச்சியாக வாழ்வோம். நோய் அறியோம் யார்க்கும் பணிய மாட்டோம் எந்த நாளும் இன்பமே அல்லாமல் துன்பம் இல்லை. எம் கடவு ளாகிய சிவபெருமான் யார்க் கும் குடி அல்லதா தனித் தலைமை உடையவர், அவர் ஒருவர்க்கே யாம் என்றும் மீளாத அடிமையாய் அவரு டைய திருவடியை அடைந் திருக்கின்றோம்' என்றார்.

அந்தப் பாடலின்தொடக்க மாகிய 'நாம் ஆர்க்கும் குடி யல்லோம்' என்பது நாட்டு விடுதலைப் போர் நடந்த காலத்தில் அறிஞர் பலர் நாவிலும் மந்திரம்போல் வழங்கிய தொடராகும்.

எல்லாம் கடவுள் செயலே என்பதை அவர் ஒரு திருத் தாண்டகப் பாட்டில் அழகா கப் பாடியுள்ளார்.

'நீ ஆடச் செய்தால் அதற்குத் தகுந்த படி ஆடா தவர் யார்? நீ அடங்கச் செய்தால் அடங்காதவர் யார்? நீஓடச் செய்தால் ஓடா தவர் யார்? நீ உருகச் செய் தால் உருகாதவர் யார்? நீ பாடச் செய்தால் பாடா தவர் யார்? நீ பணியச் செய் தால் பணியாதவர் யார்? நீ காணச் செய்தால் காணா தவர் யார்? நீ காட்டா விட் டால் காணவல்லவர் யார்?

ஆட்டுவித்தால் ஆர் ஒருவர்
ஆடா தாரே
அடக்கு வித்தால் ஆர் ஒருவர்
அடங்கா தாரே
ஓட்டு வித்தால் ஆர்ஒருவர்
ஓடா தாரே
உருகு வித்தால் ஆர் ஒருவர்
உருகா தாரே
பாட்டு வித்தால் ஆர் ஒருவர்
பாடா தாரே
பணி வித்தால் ஆர் ஒருவர்
பணியா தாரே
காட்டு வித்தால் ஆர் ஒருவர்
காணா தாரே
காண்பார் ஆர் கண்ணுதலாய்
காட்டாக் காலே.

திருநாவுக்கரசர் பாடல் களில் பக்தியின் உருக்கம் மிகுந்துள்ளது.

திருஞானசம்பந்தர் போல் ஆணையிட்டுக் கூறும் முறை இல்லை.

பணிவும் குழைவுமே மிகுதி கல்வி ஞானம் மிகுந்திருந்த

( 6ஆம் பக்கம் பார்க்க )

## சிவராத்திரியில் சிந்திக்கத் தக்கவை

(நேற்றைய தொடர்ச்சி)

திருக்கைலாச மலையை அசைத்து அதனை எடுக்க முயன்றான் பத்துத்தலை இராவணன். அவன் அகங் காரத்தைப் போக்கத் திரு வுளங்கொண்டு, திருக்கைலாச பதி திருப்பெருவிரலினால் அவனை ஊன்றி நெரித்தார். அவன் மலையின் கீழகப்பட்டு ஓ என்றலறினான். அங்கே தவஞ்செய்து கொண்டிருந்த வாசீக முனிவருக்கு பெரிய இரக்கம் உண்டானது. அவர் அவனருகில் மெல்லச்சென்று ''சிவபெருமானைப் பாடு; அவர் மன்னிப்பார்'' என்று புத்திமதி சொன்னார். அவன் அவ்வாறு செய்து உய்ந்தான்.

வாசீகர் செய்தது தரும காரியம்; அறம். ஆனால் சிவ பெருமானின் கருத்தறிந்து செய்யாது அவர் தவறிவிட் டார். சிவபெருமான் சர்வ சீவதயபாரர். அவர் இரா வணனை அவன் நன்மைக்கே தண்டித்தார். அவர் கருத்தை விசாரியாமல் வாசீகர் இரங்கி னார். அது சந்நிதி விரோ தமாய், அதற்காக அவர் பிறவி எடுக்க நேர்ந்தது. அந்த வாசீகரே திருநாவுக் கரசு நாயனார். இரா வணனைப் பாடு என்று புத்தி சொன்னவர், தாமும் தமி ழிற் பாடி எக்குற்றத்தைப் போக்க வேண்டியதாயிற்று. 'நீதியால் வாழமாட்டேன்,' என்றும் 'இராவணனை

பண்டிதமணி

**சி. கணபதிப்பிள்ளை**

ஊன்றிய பெருவிரலின் நீதியை யாரோ அறிவார்' என்றும் பாடிப்பாடி இனித் தார்.

பிரதம விஷ்ணுக்களுக்கும் நாயன்மாருக்கும் சிவபெரு மான் நேரே பிரத்தியட்சமாய் அருள்புரிந்தார். அவர்களுக் குத் தவம் இருந்தது. அவர் கள் கடவுள் கருத்தறிந்து காரியத்தைச் செய்தார்கள்.

திருஞானசம்பந்தர் மது ரைக்குச் சமணர்களுடன் வாது செய்யப்போகும் போது ''சமண் சித்தரை அழிக்கத் திருவுள்ளமே'' என்று திரு வருளின் கருத்தை விசாரித்து, சுவாமியிடம் உத்தரவு பெற் றுக்கொண்டு போனால் அவ ருக்கு அட்டக்கிரகத்துக்கு மேலே நவக்கிரகங்களும் நல்ல வாயின.

''ஞாறு திங்கள் செவ்வாயிய்
புதன் வியாழன் வெள்ளி
சனி பாம்பிரண்டு முடனே
ஆசறு நல்ல நல்ல அவை
நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே''

என்று ஓதி நாமும் சமீபத் தில் உய்திபெற்றோம்.

சம்பந்தர் முதலிய மகான்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ''அதுதான் தண்டம் சமர்ப்பிப்பது''

நமஸ்காரம் செய்வதைத் தண்டம் சமர்ப்பித்தல் என் பார்கள். தண்டம் என்றால் கழி அல்லது கோல் என்று அர்த்தம். கையில் பிடித்திருக் கிற ஒரு கோலை விட்டு விட் டால் அது அப்படியே சடா ரென்று கீழே விழுந்து விடும் அப்படியே இந்தச் சரீரத்தை நமதல்ல, இது ஈசுவரனுடை யது என்கிற எண்ணத்துடன் கீழே போடுவது தான் நமஸ் காரம். நம் சரீரம் வெறும் மரக்கோல் தான். உதவாத பொருளை அது தண்டமாகி விட்டது என்கிறோம். அப்படி தண்டமான வஸ்துதான் நம் சரீரம்இதை சாக்குப்பிடித்து. நிறுத்தி வைத்து ஆட்டுகிற சக்தி ஈசுவரன் கொடுத்ததே ஆகும். இந்த உடம்பை ஏதோ நாமே தாங்கி நடக்கிறோம் என்ற எண்ணத்தை ஒழித்து விட்டு அதாவது அகங் காரத்தை விலக்கி விட்டு அதற்கு அடையாளமாக ஈசு வரன் முன் இந்த சரீரத் தைக் கீழே போடவேண்டும். அது தான் தண்டம் சமர்ப் பிப்பதுஜுரம் வந்தால் நம். சரீரத்தால் நிற்கவும் நடப் பதும் முடிகிறதில்லை. இந்த ஜன்மாவே பெரிய ஜுரமாக வந்திருக்கிறது. இதிலிருந்து நம்மைக் கடைத்தேற்றுவதற் காக நமக்கு வந்திருக்கிற ஸம்ஸார ஜுரத்தைப் புரிந்து கொண்டு அதற்கு அடை

• காஞ்சிப் பெரியவா •

யாளமாக ஸ்வாமியின் முன் தண்டாகாரமாக விழுந்து நமஸ்கரிக்க வேண்டும்.

''நாம் செய்கிறோம்'' என்கிற எண்ணம் போய்விட் டால்அதுவே ஸதாகாலநமஸ் காரம். அந்த அனுபவம் நமக்குச் சிந்திக்காத போதி லும் ஈசுவர சந்நிதியிலாவது அப்படிப் பாவித்து வணங்கித் தரையோடு தரையாக எளி மையாக கிடக்கவேண்டும். இங்கே வணங்கி விட்டால் அப்புறம் வெளியே எங்கேயும் வணங்காமல் இருக்கலாம். ''பொறுப்பை உன்னிடமே பூரணமாகப் போட்டேன்'' என்பதற்கு அடையாளம் சரீரத்தைத் தரையில் போடு வது. கொஞ்சம் பொறுப்பை நமக்கு என்று வைத்துக் கொண்டால் கூட ஸ்வாமி நம் பங்கைக் குறைத்துக் கொண்டு விடுவார். இதில் அரைகுறைக்கு இடமே இல்லை' நம்முடைய நல்லது கெட்டது அவ்வளவும் அவர் விட்டபடி என்று சகல பொறுப்பையும் அவரிடம் தள்ளுவதற்கு வெளி அடை யாளமாக உடம்பைத் தரை யில் தள்ளி நமஸ்காரம் பண்ண வேண்டும். அப்படிச் செய்தால் நம் பாரம் அனைத் தையும் கிருபாச முத்திரமான ஸ்வாமியே ஏற்று அனுக்கிர கிப்பார்.

# ஆய்வுகூட வசதியின்மையால் யாழ் விவசாயிகள் பாதிப்பு!

## விவசாய ஆராய்ச்சி அலுவலர்

திருநெல்வேலியில் இயங்கும் விவசாயத் திணைக்கள ஆராய்ச்சிப் பிரிவினர் 85 ஆம் ஆண்டுக்கு முன்னர் விவசாயிகளின் நன்மை கருதி மண், விதை, பயிர்களில் ஏற்படும் நோய் போன்றவற்றை ஆராய்ச்சி செய்து, அதற்கேற்ற தகுந்த நடவடிக்கைகளையும் மேற்கொண்டு இருந்தனர்.

நாட்டில் ஏற்பட்ட தொடர் நெருக்கடி காரணமாககடந்த 13 வருடங்களாக இத்தகைய ஆராய்ச்சிகளை மேற்கொள்ள முடியாத நிலையில் இவ் ஆராய்ச்சிப் பிரிவு உள்ளது. ஏனெனில் இந்த ஆய்வு கூடத்தில் இரசாயனங்கள், மற்றும் ஆய்வு கூட உபகரணங்கள இல்லாதமையே இதற்குக் காரணமாகும். இப்பிரிவில் பணியாற்றும் ஆராய்ச்சி அலுவலர் திருமதி எஸ். விஜயரட்ணம் எமது செய்தியாளரிடம் தெரிவித்துள்ளார்.

இது பற்றி அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், வடமராட்சி, தென்மராட்சி, தீவகம், வலிகாமம் ஆகிய பகுதிகளில் உள்ள மண்களையும், பயிர்ச்செய்கைக்கு ஏற்ற விதைகளையும், பயிர்களில் ஏற்படும் நோய்களை ஆராய்வு செய்வதற்காக இதன் மாதிரிகள் தற்போது வவுனியாவிற்கே அனுப்பி வைக்கப்படுகின்றன.

இந்த ஆராய்ச்சி முடிவுகள் இங்குவர ஏற்படும் காலதாமதம் காரணமாக உரிய முறையில், ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள விவசாயிகளால் முடிவதில்லை.

அத்துடன் இந்த ஆராய்ச்சிகளையும், முடிவுகளையும் தங்கள் முன்னிலையில் செய்து காட்டப்பட வேண்டும் என்பதில் ஆர்வமாய் உள்ளனர்.

எனவே எமது ஆராய்ச்சிப் பிரிவில் உள்ள ஆய்வு கூடத்திற்கு தேவையான இரசாயன, மற்றும் ஆய்வுகூட உபகரணங்கள் கிடைக்கப் பெறுமாயின் ஆராய்ச்சிகளையும் முடிவுகளையும் நாங்கள் இங்கேயே மேற்கொள்வோம்.

இதன் மூலம் வீண் காலதாமதத்தை தவிர்த்து விவசாயிகளுக்கு உடனடிப்பயன்தரக் கூடிய நம்பகமான முடிவுகளை வழங்கி அதற்கான மாற்று நடவடிக்கையை மேற்கொள்ள வழிசெய்வோம் என்று அவர் மேலும் எமது செய்தியாளரிடம் தெரிவித்துள்ளார்.

## ஒன்று கூடல்

எதிர்வரும் 20ம் திகதி தீவக மாணவர்களின் கல்வி அபிவிருத்தி பற்றிக்கலந்துரையாட அதிபர்களை வேலணை சேர் வைத்தியலிங்கம் துரைசுவாமி மத்திய மகாவித்தியாலயத்தில் ஒன்று கூடும்படி வேலணை, ஊர்காவற்றுறை கோட்டங்களுக்கு பொறுப்பாக இருக்கும் உதவிக்கல்விப் பணிப்பாளர் இ. அருளானந்தம் தெரிவிக்கின்றார்.

## துறைமுகஊழியர் சம்பள உயர்வு

துறைமுக ஊழியர்களுக்கு இந்த ஆண்டு ஜனவரி மாதத்திலிருந்து சம்பள உயர்வு வழங்கப்படவுள்ளது.

இதற்கான தீர்மானத்தை அமைச்சர் அஷ்ரப் எடுத்துள்ளார்.

துறைமுக ஊழியர்களின் சம்பளத்தைப் பரிசீலனை செய்த குழுவின் சிபார்சின் அடிப்படையிலேயே இச்சம்பள அதிகரிப்பு வழங்கப்படவுள்ளது.

## சிவராத்திரியில் சிந்திக்க

கள் போல நாம் உத்தரவு பெறுதல், கடவுள் கருத்தை நேர அறிதல் இயலாத காரியம். நம்மிடம் தவம் இல்லை.

திருவருள் தன் கருத்தை உணர்த்தும் பொருட்டு வேதாகமம் ஆகிய சாத்திரங்களைத் தந்திருக்கின்றது. திருவள்ளுவர் ஔவையார் முதலிய தெய்வப் புலமையாளர் திருவருளின் கருத்தை விளக்கஞ் செய்திருக்கிறார்கள். குருபரம்பரையைப் பேணி, பெரியோர்களை அணுகிச் சாஸ்திர விசாரணை மூலம் திருவருளின் கருத்தை நாமறிந்து நடக்கலாம். அவ்வாறு நடவாமல், அறியாமையும் வஞ்சகமும் நிறைந்த நாம் - சிற்றறிவும் சிறுதொழிலும் உள்ள நாம் - நம்முளைப்பால், இது நன்மை என்று கற்பனை செய்து, ஒன்றைச் செய்வதால், அது குளிக்கப்போய்ச் சேறு பூசுவதாய் இருக்கும்.

'அரனறன் பாதம் மறந்து செய் அறங்களெல்லாம் வீண் செயல்' என்பதனை மீண்டும் ஞாபகம் செய்து சிந்திப்போமாக.

கிராம வாழ்க்கையில் வஞ்சகத்தை அறியாது வாழும் மனிதனொருவன், சந்தேகந் தோன்றுஞ் சந்தர்ப்பத்தில், தன்குலதெய்வத்தின் சந்நிதியில், பூக்கட்டி வைத்துப் பிராத்தனை செய்து சந்தேகந் தெளிய முயலுகின்ற பயபக்திபான முறையும் ஈண்டுச் சிந்திக்கத்தக்கது.

(தொடரும்)

## திருநாவுக்கரசர்.

போதிலும் அவருடைய பக்தி வாழ்வு கையால் தொண்டு செய்வதைப் போற்றியது.

மிகப் பெரிய தத்துவ ஞானியாக விளங்கிய அவர், தம் ஞானத்தைப் பற்றிப்பெருமை கொள்ளாமல், கோயில் தொண்டு செய்து வந்த தமக்கையாரின் நெறியையே உயர்ந்ததாகப் போற்றினார்.

அதனால் கையில் உழவாரம் என்னும் களைக்கொட்டுக் கருவியை ஏந்திக் கோயில்களுக்குச்சென்று, அங்கங்கே தரையில் கிடந்த புல்லையும் முள்ளையும் கொத்திக் கல் முதலியவற்றை அப்புறப்படுத்தி தூய்மை செய்வதையே பெரும்பேறு எனக் கொண்டார்.

அவ்வாறு தொண்டு செய்தபடியே கோயில்களை வலம் வந்து அவர் பாடிய பாடல்களில், அவர் பெற்ற கல்வித் தெளிவும் தத்துவ ஞானமும் புலனாகின்றன.

''உண்மை என்னும் உழவைச் செய்து, விருப்பம் என்னும் விதையை விதைத்து, பொய் என்னும் களையை நீக்கி, பொறுமை என்னும் நீரைப் பாய்ச்சி, தம்மைத் தாமே நோக்கி உணர்ந்து, தக்க சன்மார்கம் என்னும் வேலி அமைத்துச் சிறந்த நெறியில் நிற்பார்களானால் சிவகதி என்னும் விளைவு ஏற்படும்'' ''மனம் என்னும் தோணியைப்பற்றி, அறிவு என்னும் துடுப்பை ஊன்றி, சினம் என்னும் சரக்கை அந்தத் தோணியில் ஏற்றிக்கொண்டு, பிறவியாகிய கடலில் ஓடும்போது, மதம் என்னும் பாறைதாக்கி அழியும் போது, அறிவிலே தெளிவாக இயலாமற் போகுமோ, அப்போது, சிவபெருமானே, உன்னை நினைந்து உருகும் உணர்வை அருளி ஆட்கொள்ள வேண்டும்.''

இவ்வாறு பல பாடல்களில் தத்துவ ஞானத்தைக் குழைத்துத் தந்துள்ளார்.

திருநாவுக்கரசர் ஒரு முறை கயிலைமலையைக் காண ஆசை கொண்டார்; பயணம் மேற்கொண்டார்.

அப்பொது வழியில் ஒரு குளத்தில் மூழ்கி எழுமாறு தெய்வ ஆணை பிறந்ததாம்.

அவ்வாறு முழுகியபோது கயிலைமலைக் காட்சியைக் கண்டாராம், திருவையாற்றின் குளக்கரையில் எழுந்தாராம். அப்போது உலகில் வாழும் உயிரினங்களில் கடவுளின் அன்பான ஆட்சியை உணர முடிந்ததாம்.

அப்போது அவர் பாடிய பாடலில், ''சிவபெருமானையும் பார்வதியையும் பாடியவாறே பூவும் நீரும் எடுத்துச் செல்வோரின் பின்யானும் சென்றேன். போன சுவடு தெரியாமல், திருவையாற்றை அடைந்தேன். அப்போது காதல் உடைய பெண்யானையுடன் ஆண்யானை வருவதைக் கண்டேன். அந்தக் காட்சியில் சிவபெருமானுடைய திருவடியையே கண்டேன். கண்டறியாத அற்புதமான கடவுள் காட்சியையே கண்டேன்'' என்று குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறே மற்றப் பறவை விலங்குகளின் அன்பு வாழ்வினிடையே சிவபெருமானின் காட்சியைப் பெற்றதாகத் தொடர்ந்து பாடியுள்ளார்.

அவர் வாழ்ந்த காலத்தில் திங்களூர் என்ற ஊரில் அப்பூதி என்னும் பிராமணர், திருநாவுக்கரசு என்னும் பெயரை மந்திரம்போல் போற்றி அவரையே வழிபட்டு வந்தார்.

தம் அறச்சாலைக்கு அதே பெயர் இட்டார்.

தம் மக்களுக்கும் அப்பெயரே இட்டு வழங்கினார்.

திருநாவுக்கரசு வேளாளர்.

ஆயினும் சாதி உயர்வும் தாழ்வும் பற்றிய எண்ணத்திற்கு இடம் தராமல், அப்பூதி அவரைத் தெய்வமாகப் போற்றி வழிபட்டார்.

அப்பருடைய பாடல்கள் பல ஆயிரங்கள் இருந்தனவாம். இப்போது கிடைப்பவை 3066 பாடல்கள்

(ஆசிரியர் எழுதிய 'தமிழ் இலக்கிய வரலாறு' என்ற நூலில் இருந்து)

## சன சமூக நிலைய சமாசம் கலைப் போட்டி முடிவுகள்

யாழ் - மாநகர எல்லைக்குட்பட்ட சனசமூக நிலையங்களின் சமாசம் அண்மையில் நடாத்திய கலைப் போட்டிகளில் பரிசு பெற்றோர் விபரம்:-

### பேச்சுப் போட்டி

**கீழ்ப்பிரிவு**

1 ஆம் இடம் செல்வன் கு. துபாகரன் கொழும்புத்துறை, மேற்கு ச. ச. நி., 2 ஆம் இடம் செல்வி செ. தர்சினி காந்தி ச. ச. நிலையம் 3ஆம் இடம் செல்வி. இ. கஜிபனா கலைச்சுடர் ச. ச. நிலையம்.

**மத்திய பிரிவு**

1ஆம் இடம் செல்வன் நா. இராஜலக்ஷ்மன் அரியாலை சரஸ்வதி ச. ச. நி., 2ஆம் இடம் செல்வன் ப. தனுராஜ் கலைவாணி ச. ச. நி., 3ஆம் இடம் செல்வன் சி. சேந்தன் ஜனசக்தி ச. ச. நி.

**மேற் பிரிவு**

1ஆம் இடம் செல்வன் த. தயாபரன் ஸ்டார் ச. ச. நி., 2ஆம் இடம் செல்வி க. லலிதசொரூபினி கொழும்புத்துறை மேற்கு ச. ச. நி., 3ஆம் இடம் செல்வி சோ. கலைபாரதி மேற்கு ச. ச. நி.

**அதி மேற் பிரிவு**

1ஆம் இடம் செல்வன் யூஜின் ராஜ் குருநகர் ச. ச. நி., 2ஆம் இடம் செல்வி ச. குமுதினி காந்தி ச. ச. நி., 3ஆம் இடம் செல்வன் சூ. அகிலன் அரியாலை சரஸ்வதி ச.ச. நி.

### பொது அறிவு

**கீழ்ப் பிரிவு**

1ஆம் இடம் செல்வன் இ. சபேசன் ஸ்ரார் ச. ச. நி., 2ஆம் இடம் செல்வன் ஜெ. தனுஷன் அரியாலை சரஸ்வதி ச. ச. நி., 3ஆம் இடம் க. கபிலசொரூபன் கொழும்புத்துறை மேற்கு ச. ச. நி.

**மத்திய பிரிவு**

1ஆம் இடம் செல்வன் தி, துவாரகன் அரியாலை சரஸ்வதி ச. ச. நி., 2ஆம் இடம் செல்வன் நா. இராஜலக்ஸ்மன் அரியாலை சரஸ்வதி ச. ச. நி., 3ஆம் இடம் செல்வன் ப. தனுராஜ் கலைமகள் ச. ச. நி.

**மேற் பிரிவு**

1ஆம் இடம் செல்வன் பா. தனுஷன் அரியாலை சரஸ்வதி ச. ச. நி., 2 ஆம் இடம் செல்வன் ஞா. ற. தேவராஜன் அரியாலை சரஸ்வதி ச. ச. நி., 3ஆம் இடம் செல்வி க. லலிதசொரூபினி கொழும்புத்துறை மேற்கு ச. க. நி.

### கவிதைப் போட்டி

**16 வயதுக்குக் கீழ்**

1ஆம் இடம் செல்வன் நா. இராஜலக்ஸ்மன் அரியாலை சரஸ்வதி ச. ச. நி., 2 ஆம் இடம் செல்வி த. ஜெரினா கலைமகள் ச. ச. நி., 3ஆம் இடம் செல்வி ப. இந்துவாணி கலைமகள் ச. ச. நி.

**16 வயதுக்கு மேல்**

1ஆம் இடம் செல்வன் த. தர்மேந்திரா காந்தி ச. ச. நி., 2ஆம் இடம் செல்வி பீ. நளினா காந்தி ச. ச. நி., 3ஆம் இடம் யோ. ஜீன்ருஷ்மி குருநகர் ச. ச. நி.

### கட்டுரைப் போட்டி

**கீழ்ப் பிரிவு**

1ஆம் இடம் செல்வி தெ. மெ. மெலானி குருநகர் ச.ச. நி., 2ஆம் இடம் செல்வன் யோ. இராஜசேகர் குருநகர் ச. ச. நி., 3ஆம் இடம் செல்வன் ஜெ. தனுஷன் அரியாலை, சரஸ்வதி ச. ச. நி.

**மத்திய பிரிவு**

1ஆம் இடம் செல்வன் த. பிரதீபன் திருமகள் ச. ச.நி., 2ஆம் இடம் செல்வி நி. ஜெயதர்மினி கலைமகள் ச. ச.நி., 3ஆம் இடம் செல்வி இ. இந்துயாகினி கலைமகள் ச. ச. நி.

**மேற் பிரிவு**

1ஆம் இடம் செல்வி பீ. நளினா காந்தி ச. ச. நி., 2ஆம் இடம் செல்வன் எம். எவ். நிரோஜன் குருநகர் ச. ச. நி., 3 ஆம் இடம் செல்வி ஜீன்ருஷ்மி குருநகர் ச. ச. நி.

முதல் மூன்று இடங்களைப் பெற்றோருக்குப் பரிசில்களும் ஏனையவர்களுக்கு தகைமைச் சான்றிதழ்களும் வழங்கப்பட இருக்கின்றன என்று போட்டி அமைப்பாளர்கள் தெரிவிக்கின்றனர்.

யாழ் மாநகர ச. ச. நிலையங்களின் சமாசம் நடாத்திய பேச்சுப் போட்டியில் 1ஆம் பரிசு பெற்றவர்களுக்கு வழங்கப்பட இருக்கும் தங்கப்பதக்கங்ளை வழங்கியோர்:-

திரு. சோமலிங்கம் அழகக்கோன் களஞ்சிய உரிமையாளர் அரியாலை., ஓவியச் செல்வன் ஆட்ரிஸ் தர்மன் நாராயணன் வீதி, கோண்டாவில்., சத்தியாஸ் போட்டோ உரிமையாளர் அரியாலை., சஞ்சீவி பெயின்ற் ஹவுஸ் உரிமையாளர் தி. ஜெயந்தன் பாரதி வீதி, யாழ்ப்பாணம்.

## கசிப்புக்கு தடை

(பருத்தித்துறை)

வடமராட்சிப் பகுதியில் கசிப்பு உற்பத்தி விற்பனைகள் அதிகரித்து வருவதாகப் பொது மக்கள் புகார் செய்துள்ளனர். இதனையடுத்து வடமராட்சிப் பகுதியில் உள்ள சனசமூகநிலையங்களும் கசிப்பு உற்பத்தி, விற்பனைகளைத் தடைசெய்வதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாக வடமராட்சிப் பகுதியில் இயங்கும் சனசமூக நிலையங்களின் சமாசத்தலைவர்கள் கூட்டாக அறிவித்துள்ளனர்.

## ரூபவாஹினிக் கூட்டுத்தாபன புதிய பணிப்பாளர் நாயகம்

இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத் தாபனத்தின் புதிய பதில் பணிப்பாளர் நாயகமாக எச்.ஏ.ஓ. எம் பெரேரா நியமிக்கப் பட்டுள்ளார் இவர் தகவல் திணைக்களத்தில் பிரதிப்பணிப்பாளராக இதுவரை கடமையாற்றியவர் இவர் இந்தக் கடமையை தொடர்ந்து ஆற்றி வருவார் இவரது நியமனம் தபால் தொலைத் தொடர்புகள் வெகுஜன தொடர்பு அமைச்சர் மங்கள சமர வீரவின் உவப்புரையின் பேரில் இடம் பெற்றுள்ளது.

## பிளாஸ்ரிக்கினாலான திரை லண்டனில் கண்டு பிடிப்பு

கேம்பிரிட்ஜில் உள்ள பிரிட்டிஷ் விஞ்ஞானிகளும் ஜப்பான் நிறுவனத்தினரும் இணைந்து முதன் முதலாக பிளாஸ்ரிக்கினாலான தொலைக்காட்சித் திரையினைக் கண்டு பிடித்துள்ளனர்.

இந்த பிளாஸ்ரிக் திரை 2 மில்லிமீட்டர் தடிப்புடையது இத்திரை கறுப்பு வெள்ளை செயற்திறன் உடையதாகும்.

எனினும் வர்ணத் தொலைக்காட்சி பிளாஸ்ரிக் திரையை இவ்வருட இறுதியில் தாம் கண்டு பிடித்து விடுவதாகவும் விஞ்ஞானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இந்தப்பிளாரிக் தொலைக் காட்சித் திரை 3 வருடங்களில் விற்பனைக்கு விடப்படும் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

## பொலிகண்டி இளைஞர் கழகம்

பருத்தித்துறை பொலிகண்டி மேற்கு இளைஞர் கழத்தின் ஆதரவுடன்மகளிருக்கானதையல், மனையியல்பயிற்சி நெறியொன்று ஆரம்பித்துவைக்கப் பட்டுள்ளது. தேசியஇளைஞர் சேவைமன்ற உதவிஇளைஞர் சேவை அதிகாரி எஸ். கோகிலராஜா. இப்பயிற்சிநெறியை ஆரம்பித்துவைத்தார். பருத்தித்துறை பிரதேச இளைஞர் கழக சம்மேளனத் தலைவர். ரீ. பிரதீபன் கிராம சேவை அலுவலர் வி வன்னிமரம்உட்பட பொதுமக்களும் இவ்விழாவிலே கலந்து கொண்டனர்.

# காங்கேசன் லங்கா சீமெந்து ஊழியரின் அவல நிலை

யாழ் குடாநாட்டில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் யுத்தம் காரணமாக லங்கா சீமெந்து லிமிட்டெட் ஸ்தாபனத்தின் உற்பத்திகள் யாவும் நிறுத்தப்பட்டதனால் ஊழியர்களுக்கு நிர்வாகம் 91 ஆம் ஆண்டு முற்பகுதியிலிருந்து அரைச் சம்பளமே வழங்கி வந்தது.

இந்த அரைச் சம்பளம் ரூபா 1210/-க்கும், ரூபா 1410/- கிடைப்பதாக இன்று வரைகொடுபட்டு வருகின்றது.

இந்த அரைச்சம்பளம் தற்போதைய செலவினத்தின் மூன்றிலொரு பங்கிற்கே போதாததாகும். இந்நிலையை இது நாள் வரை நாட்டு நிலைமை காரணமாக பொறுமையோடு சகித்து வந்துள்ளோம். ஆனால், படையினரால் வலிகாமம் கைப்பற்றப்பட்டபின் சகஜ நிலைமை திரும்பியதன் பின்பும் எமக்கு தற்பொழுதும் அரைச்சம்பளமே கொடுபட்டு வருகின்றது.

எமது தலைமைச் செயலகத்திலுள்ள ஊழியர்களுக்கு 1994 இல் மாற்றியமைக்கப்பட்ட புதிய சம்பளத்தின் அடிப்படையில் சம்பளம் கொடுபட்டு வருகின்றது. தற்பொழுது 98 ஆம் ஆண்டு தைமாதம் புதிய சம்பளத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

(1) 1991 ஆம் ஆண்டிலிருந்து முழு நிலுவைப் பணத்தைத் தருவதோடு

)2) 1998 ஆம் ஆண்டிலிருந்து புதிய சம்பளத் திட்டத்தின்படி முழுச் சம்பளத்தையும் தரும்படியும்.

(3) தலைமைச் செயலக ஊழியர்களுக்கு வழங்கப்பட்டு வருவது போல் எமது சம்பளத்தையும் வழங்குமாறு ஜனாதிபதியையும் கைத்தொழில் அமைச்சரையும் வேண்டுகின்றோம்.

ஈ.பி.டி.பி. யினர் தமது செயலாளர் நாயகம் திரு. டக்ளஸ்தேவானந்தா எம்.பி. மூலமாக பாராளுமன்றத்தில் ஜனாதிபதியிடம் கதைத்து இம் மூன்று கோரிக்கைகளையும் வெகு விரைவில் பெற்றுத் தருவதாக கூறியுள்ளார்

## பழமரக் கன்றுகள் விநியோகம்

(பருத்தித்துறை)

வடமராட்சிப் பகுதி விவசாய அபிவிருத்தி மேம்பாட்டு நடவடிக்கைகளுக்கென விவசாயத் திணைக்களம் 50,000 ரூபாவை வழங்கியுள்ளது.

இவ் விவசாய அபிவிருத்தி மேம்பாட்டுத் திட்டங்கள் பருத்தித்துறை, கரவெட்டி பிரதேச செயலகப் பகுதிகளில் மேற்கொள்ளப்படவுள்ளன.

இத்திட்டத்தின்கீழ் 40,000 ரூபா பெறுமதியான பழமரக்கன்றுகள் பழமரங்கள் வளர்ப்போருக்கு இலவசமாக வழங்கப்படவுள்ளன. அத்துடன் இரு பிரதேச செயலக பிரிவுகளிலும் விவசாயப் பொருட்காட்சிகளும் நடாத்தப்படவுள்ளதாக விவசாயப் போதனாசிரியர் ஏ. கோபிநாத் தெரிவித்தார்.

## இளைஞர் வள நிலையம்

(பருத்தித்துறை)

தொண்டமானாறு சந்நிதி இளைஞர் கழகத்தின் '' இளைஞர் வள நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்நிலையத்தை இளைஞர் சேவைமன்றஉதவி இளைஞர் சேவைஅதிகாரி திரு.எஸ்கோகிலராஜாசம்பிரதாயபூர்வமாகத்திறந்து வைத்தார். மதகுருமார் ஆசியுரைவழங்கினர் பிரஜைகள் குழுத்தலைவர் திரு.என்,சண்முகசுந்தரம் சனசமூகநிலையத் தலைவர். திரு.எம். தம்பித்துரை உட்பட இன்னும்பலர் இவ்விழாவிலே கலந்துகொண்டனர் சந்நிதி இளைஞர் கழகத் தலைவர்.திரு.கேஜெயராஜா விழாவிற்குதலைமை தாங்கினார்.இவ் இளைஞர் வள நிலையத்தில் இளைஞர்களுக்கான பல்வேறு வகையான பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும்தெரிவிக்கப்பட்டுள்ளது.

கோயம்புத்தூர்

# சம்பவ சூத்திர தாரிகள் இனம் காணப்பட்டனர்

கோயம்புத்தூரில் இடம் பெற்ற தொடர் குண்டு வெடிப்புச் சம்பவங்களில் சூத்திரதாரிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இத்தகவலை நேற்று முன் தினம் சென்னையில் இடம் பெற்ற செய்தியாளர் மாநாட்டில் வைத்து மாநில உள்துறை அமைச்சர் பூர்ணலிங்கமும், காவல் துறை தலைவர் சர்மாவும் தெரிவித்தனர்.

இக் குண்டு வெடிப்பில் கொல்லப்பட்ட 60 பேரின் குடும்பங்களுக்கு நஷ்டஈவழங்குவதற்கு ஒன்றரைக் கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது என தமிழக அரசு அறிவித்துள்ளது.

அத்துடன் குண்டு வெடிப்பில் காயமடைந்து தனியார் வைத்திய சாலையில் சிகிச்சை பொறுபவர்களுக்கான செலவையும் அரசு ஏற்றுக் கொள்ளும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஈராக்கிலிருந்து

# அச்சம் காரணமாக ஐ. நா. பணியாளர்கள் குறைப்பு

அமெரிக்கத் தாக்குதல்கள் நடைபெறக் கூடும் என்ற அச்சத்தின் காரணமாக ஐ. நா. சபை தனது பணியாளர்களை முன்னெச்சரிக்கையாக பாக்தாத்தில் இருந்து வெளியேற்றியுள்ளது.

ஐ. நா. மனிதாபிமான அலுவலகத்தைச் சேர்ந்த 31 பணியாளர்கள் நேற்று ஈராக்கில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர், என ஏ. எவ் பி செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதனிடையே அமைதி நிலைக்கான கடைசி வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு எகிப்து, ஈராக்கிய அதிபர் சதாம் ஹீுசைனை நேற்று முன்தினம் வற்புறுத்தி கேட்டுக்கொண்டது.

ஆனால் அமெரிக்காவின் தாக்குதலை தடுக்கும் ஐ.நா.வின் இராஜதந்திர முயற்சிகள் வெற்றியளிக்கும் என்று ரஷ்யா நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

இராஜதந்திர முறையில் தீர்வுகாண மற்ற அரபு நாடுகளுடன் ஈராக் தொடர்பு கொண்டுள்ளது.

தங்களது தளங்களை அமெரிக்கா பயன்படுத்த அனுமதிப்பதில்லை என்று சவூதி அரேபியா, ஜோர்டான், ஹ்ரைன், ஐக்கிய அரபு எமிரேட் ஆகிய நாடுகள் ஏற்கனவே அறிவித்துள்ளன.

இதனிடையே, வளைகுடாவால் நிகழவுள்ள இராணுவ நடவடிக்கையால் எதுவித பயனும் ஏற்படப்போவதில்லை என இந்தியாவும், பிரான்ஸும் கருத்து வெளியிட்டுள்ளன.

# கோபி அனான் இன்று ஈராக்கிற்கு விஜயம்

ஐக்கிய நாடுகள்சபையின் பொதுச் செயலர் கோபிஅனான் வளைகுடா பற்றியஇறுதி முயற்சியாக இன்றுவெள்ளிக்கிழமை பாக்தாற்குவிஜயம் ஒன்றை மேற்கொள்ள உள்ளார்

அமெரிக்காஜனாதிபதிஈராக் மீதுமேற்கொள்ளஉள்ள தாக்குதலை தடுத்து நிறுத்தும் முகமாக அவர் ஈராக் சென்றுள்ளார்.

ஐ.நா பாதுகாப்புச் சபையின் முழு ஆதரவுடனேயே தாம் ஈராக் செல்வதாகவும் தன்னுடைய ஈராக் விஜயம் வெற்றியளிக்கும் எனவும் அவர் நிருபர்களிடையே பேசுகையில் தெரிவித்தார்.

இந்தோனிஷிய அதிபர்

# சுஹார்ட்டோவிற்கு அடுத்தபடியாக புதியவர் ஒருவர் உருவாகின்றார்.

இந்தோனஷியாவில் அதிபர் சுஹார்ட்டோ விற்கு அடுத்ததாக பதவி வகுக்கக் கூடிய ஒருவர் நேற்று முன்தினம் தெரிவாகி உள்ளார்.

அடுத்த மாதம் நடைபெறவுள்ள இந்தோனிஷியத் தேர்தலில் 76 வயதான சுஹார்ட்டோ போட்டியிடுகின்றார். இவருக்கு அடுத்தபடியாக இவருடன் சேர்ந்து, ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்பத்துறை அமைச்சர் டாக்டர் பி. ஜே. ஹபீபி. துணை அதிபர் பதவிக்கு போட்டியிடவுள்ளர்.

இந்தோனிஷிய ஆளும் கட்சியினர் எடுத்த இந்த முடிவை அந்நாட்டு இராணுவத்தினர் அனுமதித்துள்ளர்;

இந்தோனிஷியாவின் சமூக அரசியல் விவகாரங்களில் இராணுவம் முக்கிய பங்கு வகிப்பது இங்கு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

# புற்று நோய்வலியை கட்டுப்படுத்த புதியமுறை

புற்று நோயினால் உண்டாகும் கடுமையான வலியை குணப்படுத்த புதிய முறை ஒன்று சீனாவில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

சீனாவில் ''வாங் ஷோ'' மருத்துவ மனையைச் சேர்ந்த நரம்பியல் நிபுணரான டாக்டர் ''லியூ லிங்கோய்'' வலியைஉண்டாக்கக் கூடியதுல்லியமான இடம் மூளையில் எங்கே உள்ளது என்பதைக்கண்டறிந்துள்ளார்.

வலி ஏற்படுத்தக் கூடிய இடத்தை ''காந்த அதிர்வுகளால்'' தனிமைப்படுத்தி வலியைதூண்டும் காரணிகள் மூளைளயின் நாளங்களுக்குள்செல்லவிடாமல் டாக்டர் 'லியூ லிங்கோய்' தடுத்துவிட்டார். சீனாவின் ''சிங்குவா'' என்ற செய்தி நிறுவனம் இத்தகவலை வெளியிட்டுள்ளது.

# கொம்பனித் தெரு சம்பவம்

(கொழும்பு)

கடந்த ஆறாம் திகதி கொழும்பு கொம்பனித் தெருவில் தற்கொலைக் குண்டுதாரியால் விமானப்படை வீதித் தடை சோதனைச் சாவடியில் நடத்தப்பட்ட தாக்குதலில் வெள்ளை நிற வேனில் வந்தவர்களும் கொல்லப்பட்டதாக வந்த செய்திகள் தவறானவை என தற்போது தெரியவந்துள்ளது

இது பற்றி தெரியவருவதாவது சோதனைச்சாவடியில் வெள்ளை நிற வானில் வந்த மூவரையும் இறக்கி விமானப் படையினர் சோதித்துக் கொண்டிருக்கையிலேயே தற்கொலைப்பெண் குண்டை வெடிக்கவைத்ததாகவும் அந்நேரம் மறுபுறம் காவலரண்களிலிருந்த விமானப்படையினர் பதட்டமடைந்து வானில் வந்தவர்களே குண்டை வெடிக்க வைத்ததாக கருதி அவர்கள் மீது துப்பாக்கிபிரயோகம் மேற்கொண்டதாகவும் தெரியவருகிறது

இச்சந்தர்பத்திலேயே அப்பாவிகளான மூவரும் ஸ்தலத்திலேயே பலியானதாகவும் இராணுவத் தகவல் வட்டாரங்கள் தெரிவித்தன

# பட்டி வீரக்கோன் சுதந்திரதினவிழாவை பகிஷ்கரித்தார்

கடந்த 4ம் திகதி பாராளுமன்ற கட்டிடத் தொகுதியில் நடைபெற்ற இலங்கையின் சுதந்திர தின பொன் விழாக் கொண்டாட்டங்களில் விஞ்ஞான தொழில் நுட்பத்துறை அமைச்சரும், லங்கா சமசமாஜக்கட்சியின் பொதுச் செயலாளருமான பட்டிவீரக்கோன் பங்கு பற்றாது பகிஷ்கரித்ததாகத் தெரியவருகின்றது.

இதுதொடர்பாகபத்திரிகையாளரின்கேள்விக்குப்பதிலளிக்கையில் தமது கட்சி இதனை சுதந்திரம் என ஏற்றுக்கொள்ளவில்லையெனவும் தாம் இது வரை எந்தவொரு சுதந்திர தினவிழாவிலும் கலந்து கொள்ளவில்லை யென்றும் எனினும் 1972ல்இடம்பெற்ற குடியரசு தினவிழாவில் மட்டுமே தான் கலந்து கொண்டதாகமேலும் அவர் தெரிவித்தார்.

## பருத்தித்துறையில் ஈ.பி.டிபி அலுவலகம்

(பருத்தித்துறை)

பொலிகண்டியில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி அலுவலகம் ஒன்று திறந்து வைக்கப் பட்டுள்ளது. பொலிகண்டி பருத்தித் துறை பிரதான வீதியில் உள்ள கட்டிடம் ஒன்றில் இவ் அலுவலகம் அமைந்துள்ளது இவ் அலுவலகத்தில் மக்களின் பல்வேறு பிரச்சினைகள் பற்றி ஆராயப்பட்டு வருகின்றது.

## சிவராத்திரி விழா

(பருத்தித்துறை)

தென்புலோலி மூச்சம்பலம் சிவன் ஆலய மகாசிவராத்திரி விழா 25-02-98 நடைபெறவுள்ளது. இத்திருவிழாவை ஆலய பிரதம குரு சிவஸ்ரீ பா. இலஷ்மணன் ஐயர் நடாத்திவைப்பார். புராண படனமும் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

## வேலாயுதம் சொற் பொழிவு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினர் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடாத்தி வரும் வாராந்த நிகழ்வுகளில் இன்று 20ந் திகதி வெள்ளிக்கிழமை 10. 30 மணியளவில் சித்தாந்த பண்டிதர் சி. வேலாயுதம் இளைப்பாறிய அதிபர் அவர்களின் ''வாராதிருக்க வழக்குண்டோ'' என்னும் பொருள் பற்றிய சொற்பொழிவு நிகழ்வு இடம் பெறும்.

## பத்து ரூபாவுடன் வங்கி கணக்கு

மக்கள் வங்கியில் பாடசாலை மாணவர் ரூபா10/- உடன் வங்கியில் சேமிப்புக் கணக்கைஆரம்பிக்க சிசு உதாரண (மாணவர் மலர்ச்சி) திட்டம் வழிவகுக்கிறது இத்திட்டத்தின் மூலம் வட்டி மட்டுமன்றி உபகாரப்பணங்களும் இவர்களதுசேமிப்புக்கணக்கில் வங்கியால் சேர்த்துக்கொள்ளப்படும். அத்துடன் இக் கணக்கை வைத்திருப்போர் (க. பொ. த.) (சாதாரண உயர்தர) பரீட்சைகளில் சிறப்புச் சித்திபெறும் பொழுது வெகுமதிகளும் நோயுற்ற காலத்தில் வைத்தியச் செலவின் தன்மைக்கேற்ப ரூபா இருபது லட்சம் வரை வழங்குகின்றது. அத்துடன் மாணவருக்கு கடன் வழங்கும் திட்டமும் கொள்கையளவில் உண்டு இதனால் மாணவருக்கு வங்கிப் பழக்கமும் ஏற்படுகிறது. ஏனையோர் மக்கள் வங்கியில் கணக்கை ஆரம்பிப்பதற்கு குறைந்தது ரூபா இருநூற்றைம்பது 250/- தேவை என்பது குறிப்பிடத் தக்கது.

## தண்ணீர் பவுசர்கள் உழவு யந்திரங்கள்

வடக்கு கிழக்கு மாகாண சபை மக்களுக்குசிறந்தசேவைகளை வழங்குவதற்கு ஏதுவாகபலதண்ணீர்பவுசர்களும் உழவு இயந்திரங்களும் வழங்கப்பட்டுள்ளன.

15 இலட்சம் ரூபா பெறுமதியான பவுசர்களும் உழவு இயந்திரங் களும் மாகாண சபையின் சமூக சேவைகள் திணைக்களத்திடம் அண்மையில் கையளிக்கப் பட்டன.

வடக்கு கிழக்கு மாகாண சபை கொள்வனவு செய்த நான்கு பவுசர்களும் இரண்டு உழவு இயந்திரங்களும் இவற்றில் அடங்குகின்றன,

வட-கிழக்கு மாகாண சபையின்சமூகசேவைகள்திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி கே. சிவசிதம்பரம் இவற்றை மாகாண ஆளுநர் காமினி பொன்சேகாவிடம் இருந்து பெற்றுக் கொண்டார்.

# கோவையில் பொலிஸ் தேடுதல்
# பெருமளவில் குண்டுகள் மீட்பு

கோயம்புத்தூரில் நேற்று காவல்துறையினர் மேற்கொண்ட அதிரடிசோதனையின்போது பல இடங்களில் இருந்து குண்டுகள் கைப்பற்றப்பட்டன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை காவல்துறையின்சுற்றிவளைப்பின் போது குண்டைவெடிக்க வைத்து தற்கொலை செய்து கொண்ட இடத்திற்கு அருகில் உள்ள கட்டிடத்தில் இருந்து ஏராளமான குண்டுகளைப் பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

இதே வேளை கோவை குண்டு வெடிப்பில் சம்பந்தப்பட்டவர்கள் 9 பேர் கேரள மாநிலத்திலுள்ள களத்தூரில் நேற்று கைது செய்யப்பட்டனர். இவர்களுக்கு ''அல்ஹிமா'' இயக்கம் ஆதரவு வழங்கியதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## பிக்கு மாணவர்களுக்கான உதவித்தொகை அதிகரிப்பு

அரசாங்கத்தினால் பிக்கு மாணவர்களுக்கு வழங்கப்பட்டுவந்த உதவி தொகையை அதிகரிக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதன்படி பிக்கு மாணவர் ஒருவருக்கு வருடாந்தம் வழங்கப்பட்டுவந்த எழுநூற்றி ஐம்பது ரூபாவை ஆயிரத்து 250 ரூபாவாக அதிகரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த பதினேழு வருடங்களுக்குப் பின் வழங்கப்படும் இவ் அதிகரிப்பினால் வருடமொன்றிற்கு ஒரு கோடியே முப்பது லட்சம் ரூபாவை அரசாங்கம் செலவிடவேண்டியுள்ளது.

## பாலியல் குற்றவாளிகளுக்கு கடுமையான தண்டனை

பாலியல் குற்றங்களில் ஈடுபடுவோருக்குக் கடும் தண்டனை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்கு வசதியாக குற்றவியல் தடுப்புச் சட்டத்தில் மாற்றங்கள் செய்யப்படவுள்ளன.

நாட்டில் நாளாந்தம் அதிகரித்து வரும் பாலியல் குற்றங்களைத் தடுப்பதற்காக. ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட விசேட குழுவின் சிபார்சுக்கு இணங்கவே இத் தீர்மானம் எடுக்கப் படுவதாசு நீதி, அரசியல் விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி, எல், பீரிஸ் தெரிவித்துள்ளார்,

இதன்படி பாலியல் குற்றம் புரிந்தவர்களை பிணையின்றி தொடர்ந்து விளக்க மறியலில் வைக்க முடியுமெனவும்.

சிறுவர் துஷ் பிரயோகங்கள் சம்பந்தமான வழக்குகள் தீவிரப் படுத்தப் படுவதோடு, பாதிக்கப் பட்ட பிள்ளைகளுக்கு பாதுகாப்பு வழங்கவும் இச் சட்டத்தில் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளதாகவும் பேராசிரியர் பீரிஸ் மேலும் தெரிவித்துள்ளார்.

## வாக்களிப்பில் மோசடி மறுபடியும் வாக்கெடுப்பு

கடந்த திங்கட்கிழமை நடந்த இந்திய மக்களவைத் தேர்தலின் முதற்கட்ட வாக்களிப்பில் இடம் பெற்ற வன் செயல்கள், மோசடிகள் காரணமாகச் சில இடங்களில் மறு வாக்கெடுப்பு நடைபெற்றுள்ளது.

ஆறு மாநிலங்களில் உள்ள நூற்றுக்கும் மேற்பட்ட வாக்குச் சாவடிகளில் மேற்படி மறு வாக்கெடுப்பு நடத்தப் பட்டது.

எனினும் முதற்கட்ட வாக்களிப்பு தமக்குத் திருப்தியளிப்பதாக இந்தியாவின் தலைமைத் தேர்தல் ஆணையாளர் எம். எஸ். கில் தெரிவித்துள்ளார்,

## தலவாக்கலையில் மின்மாற்றி தகர்ப்பு

தலவாக்கலையில் நேற்று அதிகாலை இடம்பெற்ற குண்டு வெடிப்பினால் மின் மாற்றி ஒன்று முற்றாகச் சேதமடைந்துள்ளது.

தலவாக்கலை தமிழ் மத்திய மகாவித்தியாலயத்திற்கு முன்னால் இருந்த மின்மாற்றியே் குண்டுவைத்துத் தகர்க்கய பட்டுள்ளது.

இதேவேளை நேற்றைய தினம் திம்புல பகுதியில் உள்ள எண்ணெய்த் தாங்கியொன்றும் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டுள்ளது;

### ஊழலில்..

தார்.

அவர் மேலும் பேசுகையில் போர்பஸ் ஊழலில் ஈடுபட்டவர்களின் பெயர்களை வெளியிட வேண்டுமென சோனியா காந்தி தற்போது கேட்பது மக்களைத் திசை திருப்பும் நடவடிக்கை எனவும் குறிப்பிட்டார்.

### புலிகளின்...

நடவையாகும்.

எவ்வாறெனினும் இச்சிங்களக் கெரில்லாக்கள் பற்றி மேலதிக விபரங்கள் எதுவும் தெரிய வரவில்லை. அண்மைக் காலத்தில் ஏற்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் செயற்பாடுகளைச் சீர்தூக்கிப் பார்க்கும் போது, அவை புதிய போக்குகள் இரண்டைக் காட்டி நிற்பதாக உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் இயக்க செயற்பாடுகளின் பின்னணியில் சிங்கள இனத்தவர்களும் தொடர்புற்றிருப்பது, கொழும்பில் உள்ள விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள், லண்டன் நகரிலுள்ள விடுதலைப் புலிகள் இயக்க அலுவலகத்துடன் நேரடியாகவே தொடர்புகளைப் பேணுவது என்பனவே அப்புதிய இருபோக்குகளாகும் என அவர் தெரிவித்தார்.

கடந்தகாலத்தில்கொழும்பு முகத்துவாரத்தில் சயனைற் உண்டு தற்கொலை செய்து கொண்ட விடுதலைப் புலிகள் இயக்கஉறுப்பினரிடம் இருந்த செலூலர் தொலைபேசியும் பாணந்துறையில் கண்டுபிடிக்கப்பட்ட குண்டுச் சாக்குடன் இருந்த செலூலர் தொலைபேசியும், அவ்விரு தொலைபேசிகளினூடாகக் கண்டு பிடிக்கப்பட்ட மூன்றாவது தொலைபேசியும் இந்தியாவிலுள்ள சில நபர்களிடமிருந்து லண்டன் நகரிலுள்ள தமிழீழ விடுதலைப் புலிக்ள் இயக்க அலுவலகத்துடன் பேசுவதற்கு பாவிக்கப்பட்டுள்ளன.

அத்தொலைபேசிகள் மூன்றும் கார்ட் பாவித்துப் பேசும் செலூலர் தொலைபேசி இனத்தைச் சேர்ந்தவை. என்பதுடன் அவற்றைப் பெற்றுக் கொள்வதற்காகப் போலி முகவரிகளே பாவிக்கப்பட்டுள்ளன.

இதற்கும் மேலதிகமாக தலதா மாளிகைக் குண்டுச் சம்பவத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் பாவித்துள்ள செலூலர் தொலைபேசிபற்றியும் பொலிசுக்கு தகவல்கள் கிட்டியுள்ளது.

அது சிங்கள இனத்தவரின் பெயரிலேயே பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

அது தொடர்பான விசாரணைகள் இன்னும் நடைபெற்று வருகின்றன.

# புதிதாகக் குடியேறிய 103 பேருக்கு மீளக்குடியமர்வு கொடுப்பனவு

புதிதாக மீளக் குடியேறிய 103 குடும்பங்களுக்கு புதிய குடியேற்ற நிவாரணமாக ஐயாயிரம் ரூபா வழ்ங்கப்பட உள்ளது.

இதற்கான காசோலையை அரசாங்கம் யாழ். செயலகத்திற்கு வழங்கி உள்ளது. இதற்காகத் தெரிவு செய்யப்பட்ட 103 குடும்பங்களின் கிராம சேவை அலுவலர்களது விபரம் வருமாறு:-

ஜே/65 - 17 குடும்பம், ஜே/66 - 02, ஜே/72 - 13, ஜே/73 - 17, ஜே/78 - 03, ஜே/79 - 40, ஜே/82 - 06, ஜே/86 - 04, ஜே/87 - 06.

மேற்கூறிய கிராம அலுவலர் பட்டியலில் பெயருள்ள குடும்பங்கள் தத்நமது வங்கிகளுக்குச் சென்று தமது பெயர்கள் வங்கியிலும் வந்துள்ளதா என பார்க்கும்படி யாழ். செயலகம் அறிவித்துள்ளது.

இதுவரை மீளக் குடியமர்வு கொடுப்பனவு பெறாதவர்கள் கிராம அலுவலரிடம் சென்று தமது கொடுப்பனவை உறுதிப்படுத்துமாறும் இவர்களுக்குரிய கொடுப்பனவை மிக விரைவில் பெற்றுத் தருவதாகவும் யாழ். செயலகம் மேலும் தெரிவித்துள்ளது.

### ஜனாதிபதி..

தினார், வட பகுதி அபிவிருத்தி மற்றும் அரசியல் உடன்பாடு என்பனவே அவ்விரு அம்சங்களுமாகும்,

அரசியல் உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்துவதற்கு புலிகளை நிர்ப்பந்திக்கும் வகையில் வடபகுதி நிலைவரம் தொடர்பாக ஜனாதிபதி மேற்படி கருத்தினை வெளியிட்டு இருந்தார்,

பல நாடுகளில் கெரில்லாத் தலைவர்களும் அமைப்புக்களும் பல சர்ந்தர்ப்பங்களில் ஆயுதங்களை ஒப்படைத்த பின்னர் இடைக்கால நடவடிக்கையாக சம்பந்தப் பட்ட பிராந்திய நிர்வாகம் அவர்களிடம் ஒப்படைக்கப் பட்டிருப்பதை சுட்டிக்காட்டிய அமைச்சர் இதற்கு பிலிப்பீன்ஸ் மோரோ கிளர்ச்சியாளர்கள், மற்றும் கௌதமாலா, எல்சல்வல்டோர், அங்கோலா ஆகியவற்றை உதாரணமாகக் குறிப்பிட்டார்.

### 2000ஆண்டில்...

கூறினார்.

ஐ. தேகட்சி சமர்ப்பித்துள்ள மாற்றுப் பிரேரணைகள் பூரணமானவை அல்ல. காணி உரிமை, பொலிஸ் அதிகாரங்கள் போன்ற பல்வேறு விடயங்கள் குறித்து அவர்கள் இன்னும் தமது யோசனைகளை சமர்ப்பிக்கவில்லை என்றும் பேராசிரியர் பீரிஸ் கூறினார்.

## வடக்கு கிழக்கை பிரபாவிடம் ஒப்படைக்க விஜேதுங்காவும் விரும்பினார்.

வடக்குக் கிழக்குப் பகுதியினை விடுதலைப் புலிகளின் தலைவர் வே, பிரபாகரனின் நிர்வாகத்திற்குக் கீழ் கொண்டு வரத்தான் விரும்புவதாக, முன்னாள் ஜனாதிபதி டி, பி, விஜயதுங்கா தன்னிடம் தெரிவித்ததாக அமைச்சர் அஷ்ரப் தெரிவித்துள்ளார்,

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போதே அமைச்சர் அஷ்ரப் இவ்வாறு தெரிவித்தார்,

அமைச்சரின் இவ்வுரையைத் தொடர்ந்து ஐக்கிய தேசியக் கட்சி எம்பிக்கள் கூச்சலிட்டு சபை நடவடிக்கையைக் குழப்பினர்

எனினிம், டீ பி விஜயதுங்கா தன்னிடம் கூறியதை யே தான் இங்கு குறிப்பிட்டதாக தெரிவித்து தனது உரையை ஆதாரப் படுத்தினார்

## தேர்தல் நன்கொடையை தடை செய்ய வேண்டும்
### மார்க்ஷிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி

தேர்தல் சீர்திருத்தத்தின் ஒரு பகுதியாக பொது நிறுவனங்கள் அரசியல் கட்சிகளுக்கு நன்கொடை அளிப்பதைத் தடை செய்ய வேண்டும் என்று மார்க்ஷிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தியுள்ளது.

புதுடில்லியில் அக்கட்சியின் சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மார்க்ஷிஸ்ட் கம்யூனிஸக் கட்சி வர்த்தக நிறுவனங்களிடம் இருந்து எந்த வித நன்கொடையையும் ஏற்றுக் கொள்ளாது என்று கூறப்பட்டுள்ளது.

### பழம்பெரும்..

சிங்களம் கருத்துக்களைப் பரப்பிவருகிறது.

எல்லோரும் இலங்கையர் என்றும் எல்லோருக்கும் இலங்கையே தாயகம் என்றும் நுட்பமான பரப்புரையை செய்துவருகின்றது.

இப்படியாக பிரச்சார இயக்கத்திலும் சரி அரசு முன் வைத்திருக்கும் தீர்வுப்பொதியிலும்சரி தமிழரின்தேசிய தனித்துவத்தை மறுதலிக்கும் யோசனைகளே முதன்மை பெற்றிருப்பதைக்காணலாம்.

தமிழீழ மக்களின் தாயகப் பற்றையும் தேசிய உணர்வையும்மழுங்கடித்துதமிழர்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை நசுக்கி விடுவதுதான் அரசின் நோக்கம்

தமிழீழ மக்களாகிய நாம் ஒரு தேசியஇனக்கட்டமைப்பு கொண்டவர்கள் பழம்பெரும் மொழியும், பண்பாடும், பாரம்பரிய தாயகமும்பழமை மிக்க வரலாறும் கொண்ட ஒரு தனித்துவ தேசமாக நாம் வாழ்ந்துவருகிறோம்.

இந்த தமிழர் தேசத்தையே தமிழீழம் என அழைக்கிறோம்;

இந்த தமிழர் தேசத்திற்கு தன்னாட்சி உரிமையையும் இறைமையையும் வென்றெடுக்கவேநாம் போராடிவருகிறோம்.

ஒழுங்கும் அமைதியும் நிலவும் ஒரு சாதாரண சமூக சூழலில் நாம்வாழ வில்லை நெருக்கடிகள் குறைந்த ஒரு போராட்ட சூழலில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்

இப்போர்க்கால சூழலில் வாழும் எமது மக்களின் இன்றைய வாழ்நிலை மிகவும்துன்பகரமானது மக்களின் அவலங்கள் நிறைந்தது எமதுமக்களின் அவலங்கள் வெளிக் கொணரப்பட வேண்டும்என வும் அவர் மேலும் தெரிவித்தார்

## வேட்பாளருக்கு கோவையில் பாதுகாப்பு

கோயம்புத்தூர் மக்களவைத் தொகுதிக்கு இம்மாதம் இருபத்தெட்டாம் திகதி நடைபெறவுள்ள தேர்தலுக்கான பிரச்சாரம் மேற்கொள்ளும் தலைவர்களுக்கு போதுமான பாதுகாப்பு அளிக்கப்படுமென்று மாநில தலைமைத்தேர்தல் அதிகாரி திரு கே. ஏ மார்க்கில் கூறியிருக்கிறார்:

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் இது தொடர்பாக மாவட்ட நிர்வாகத்திற்கு கடுமையான உத்தரவுகள் பிறப்பிக்கப் பட்டிருப்பதாகக் கூறினார்.

கோயம்புத்தூரில் இம்மாதம் இருபத்தாறாம் திகதி மாலை 5.00 மணியுடன் தேர்தல் பிரச்சாரம் முடிவடையும் என்றும் திரு மார்க்கில் தெரிவித்தார்.

''சூரிய காந்தி'' நிறுவனத்துக்காக அவர்களது அச்சகத்தில் 1998ம் ஆண்டு பிப்ரவரி 20ம் தேதி 68/1, ராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அச்சிட்டு வெளியிடப்பட்டது; ஆசிரியர்: சு. குமாரசாமி.